இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 334 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 30 – ஞாயிற்றுக்கிழமை 14 ஜுலை 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 334 : Thiruvalluvar Year - 2055 - Aani 30 - Sunday 14 July 2024 - Dak 12 Pages ₹ 5.00

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு மக்கள் மாபெரும் அங்கீகாரம்! விக்கிரவாண்டி தொகுதியில்

# கழகம் மகத்தான வெற்றி!

## கழக வேட்பாளர் அன்னியூர் சிவா - மிகப் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் !

**விக்கிரவாண்டி, ஜுலை 14-**

**விழுப்புரம் மாவட்டம் - விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவா மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் மக்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிக்கு மாபெரும் அங்கீகாரம் அளித்துள்ளனர்.**

விழுப்புரம் மாவட்டம் விக்கிர வாண்டி சட்டமன்றத் தொகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்த நா.புகழேந்தி மறைவெய்தியதால் அங்கு இடைத் தேர்தல் நடைபெற்றது.

தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளர் சி.அன்பு மணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா உள்பட 29 பேர் போட்டியிட்ட னர். இடைத்தேர்தலுக்கான வாக்குப் பதிவு கடந்த 10ந்தேதி நடைபெற்றது.

மொத்தம் 276 வாக்குச்சாவடிகளி லும், அமைதியான முறையில் வாக் குப்பதிவு நடைபெற்றது. மொத்தமுள்ள 2 லட்சத்து 37 ஆயிரத்து 31 வாக்காளர் களில் 1 லட்சத்து 95 ஆயிரத்து 495 பேர் வாக்களித்தனர். இது 82.47 சதவீத வாக்கு பதிவாகும்.

ஓட்டுப்பதிவு முடிவடைந்ததும், வாக் குப்பதிவு எந்திரங்கள், வாக்கு எண் ணும் மையமான பனையபுரம் அரசு



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கழகத்தின் மகத்தான வெற்றியை, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் கழக முன்னோடிகள், தோழர்களுக்கு இனிப்பு வழங்கிக் கொண்டாடி மகிழ்ந்த காட்சி! கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் எ.வ.வேலு, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

மேல் நிலைப்பள்ளி மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

எந்தவித அசம்பாவிதமும் ஏற்படா மல் அமைதியான முறையில் வாக்கு எண்ணிக்கையை நடத்தி முடிக்க ஏது வாக, வாக்கு எண்ணும் மையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட் டது. விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. திஷாமித்தல், மாவட்ட போலீஸ் சூப்பி ரண்டு தீபக் சிவாச் ஆகியோர் தலை மையில் 4 கூடுதல் போலீஸ் சூப்பி ரண்டுகள், 7 துணை போலீஸ் சூப் பிரண்டுகள், 28 இன்ஸ்பெக்டர்கள், 86 சப்இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசார், தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர், துணை ராணுவப் படையினர் என 1,195 பேர் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

**தபால் வாக்குகள்!**

காலை 8 மணிக்கு வாக்கு எண் ணிக்கை தொடங்கியது. இதை யொட்டி காலை 7.30 மணியளவில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங் கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையின் சீல் அகற்றப்பட்டு வாக்குப் பதிவு எந்திரங்கள், வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்லப்பட்டன.

அதுபோல் விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் இருந்து தபால் வாக் குச்சீட்டுகள் அடங்கிய பெட்டிகளும் கொண்டு வரப்பட்டன. வாக்கு எண் ணிக்கை தொடங்கியதும் முதலா வதாக தபால் வாக்குகள் எண்ணப் பட்டன.

இதற்காக அங்குள்ள தனி அறை யில் 2 மேஜைகளில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டது. அதன் பிறகு மின் னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பதி வாகியுள்ள வாக்குகள் எண்ணப்பட்டு வருகிறது. இதற்காக மற்றொரு அறை யில் 14 மேஜைகள் போடப்பட்டது.



ஒவ்வொரு மேஜையிலும் கண்கா ணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்கு எண்ணிக்கை நிகழ்வுகளை சி.சி.டி.வி. மூலம் கண்காணிக்கவும், வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. வாக்கு எண்ணிக்கையானது, 20 சுற்றுகளாக நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை விபரம் வருமாறு:-

**1வது சுற்று!**

அன்னியூர் சிவா (தி.மு.க.) 5564

அன்புமணி (பா.ம.க.) 2894

அபிநயா (நா.த.க.) 303

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**

### கழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க வெற்றி!

# சாதனை வெற்றியை வழங்கிய தொகுதி மக்களுக்கும் - உழைத்த அனைவருக்கும் நன்றி!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, ஜுலை 14-**

**“விக்கிரவாண்டி தொகுதியில் சாதனை வெற்றியை வழங்கிய தொகுதி மக்களுக்கும் உழைத்த அனைவருக்கும் நன்றி” என்று, கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறி யுள்ளார்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:-

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர் தலில் திராவிட முன்னேற்றக் கழகத் துக்கு மகத்தான மாபெரும் வெற்றியை வழங்கிய விக்கிரவாண்டி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நாம் பெற்ற – நாற்பதுக்கு நாற்பது!**
**சாதாரண வெற்றி அல்ல!**

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட தமிழ்நாட் டின் நாற்பது தொகுதியிலும் “நாற்பதுக்கு நாற்பது” என்ற நூறு விழுக்காடு வெற் றியை திராவிட முன்னேற்றக் கழகம்



தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி பெற்றது. சாதாரண வெற்றியல்ல, பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஒவ் வொரு தொகுதியிலும் வெற்றியைப் பெற்றோம். அ.தி.மு.க. கூட்டணி படு தோல்வியை அடைந்தது. பா.ஜ.க. கூட் டணி, பாதாளத்தில் விழுந்தது. இதைத் தொடர்ந்து, விக்கிரவாண்டி இடைத் தேர்தலை எதிர்கொண்டோம்.

விக்கிரவாண்டித் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினராகப் பணியாற்றிய புகழேந்தி அவர்கள் உடல்நிலை காரண மாக மறைவெய்தியதைத் தொடர்ந்து இடைத்தேர்தலை எதிர்கொள்ள வேண் டிய சூழல் ஏற்பட்டது. தேர்தல் தேதி அறி விக்கப்பட்டதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளராக ஆற்றல் மிகு உடன்பிறப்பு அன்னியூர் சிவாவை வேட்பாளராக அறிவித்தோம்.

நாடாளுமன்றத் தேர்தல் படுதோல்வி யில் எழ முடியாமல் இருந்த அ.தி.மு.க., விக்கிரவாண்டி இடைத்தேர்தலிலும் அதே படுதோல்வியைச் சந்திக்கத்தான் போகி றோம் என்பதை உணர்ந்து போட்டியில் இருந்து பின்வாங்கியது. பா.ஜ.க., தனது அணியில் இருக்கும் பா.ம.க.வை நிறுத் தியது. ‘இடைத்தேர்தலிலேயே நிற்பது இல்லை’ என்று வைராக்கியமாக இருந்த பா.ம.க., விக்கிரவாண்டி இடைத்தேர் தலில் போட்டியிட முன் வந்த மர்மம் இன்னமும் விலகவில்லை.

**பொய் வேஷக்காரர்களின் – பகல் வேஷப் பரப்புரைகள்!**

தோற்கப் போகிறோம் என்று தெரிந்தே போட்டியிட்டது பா.ஜ.க. அணி. அவதூறு களையும், பொய்களையும் தி.மு.க. மீதும் குறிப்பாக என் மீதும் விதைத்து, தங்களது 100 விழுக்காடு தோல்வியை மறைப்பதற்காக மிகக் கீழ்த்தரமான பரப்புரையை பா.ஜ.க. அணி செய்தது. பொய்வேஷக்காரர்களின் பகல் வேஷப் பரப்புரையை, மக்கள் மதிக்கவே இல்லை. இந்த வீணர்களை விக்கிரவாண்டி மக்கள் விரட்டியடித்து விட்டார்கள்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்துக்கும் திராவிட முன்னேற் றக் கழகமே என்றும் எப்போதும் தேவை என்பதை இந்த இடைத்தேர்தலின் மூல மாக எடைபோட்டுச் சொன்ன விக்கிர வாண்டி வாக்காளப் பெருமக்கள் அனை வருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரம்காலம் பார்க்காமல் உழைத்த உழைப்புக்கும், தினந்தோறும் உருவாக் கிக் கொடுத்த திட்டங்களுக்கும் மக்கள் தெரிவித்த நன்றியின் அடையாளமாகவே இந்த வெற்றியை நான் பார்க்கிறேன்.

**அமைச்சர்கள் –**
**மாவட்டச் செயலாளர்களுக்கு நன்றி!**

திராவிட முன்னேற்றக் கழக ஆற்றல்மிகு

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**